**02.09.2025**

**O.S.No.55/2003**

**வா.சா.1 : டாக்டர்.விசாலாட்சி**

**1,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1) 1 வாதி எனது அப்பா. எனது பெரியப்பா பெயர் டாக்டர் விஸ்வநாதன். எனது பெரியப்பாவிற்கு திருமணம் ஆகவில்லை. அவருக்கு நேரடி வாரிசுகள் இல்லை. எனது பெரியப்பாவிற்கு புத்திரகவுண்டபாளையத்தில் சொத்து இருப்பதாகவும் அதற்காக என் அப்பா பெயருக்கு உயில் எழுதி வைத்திருப்பதன் அடிப்படையில் நாங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எனது அப்பாவிற்கும் பெரியப்பாவிற்கும் பூர்வீகம் ஆத்தூர் தான். எனது தாயார் பூர்வீகம் மதுரை திருமங்கலம். எனது தாயார் அரசு வேலையில் இருந்ததால் திருமங்கலத்திற்கு குடும்பத்தோடு சென்றோம். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிலும் மற்றும் நிருபண வாக்குமூலத்திலும் எனது அப்பாவிற்கும் பெரியப்பாவிற்கும் பூர்வீகம் ஆத்தூர் தான் என்று நான் சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை.

2) மேற்படி தாவா சொத்து 07.11.1949 டாக்டர் விஸ்வநாதனுக்கு 16 செண்ட் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலமும் மற்றொன்று பதிவு செய்யப்படாத பத்திரம் மூலமும் 588 செண்ட் வாங்கி உள்ளார். மேற்படி பத்திரத்தில் 16 செண்ட்டுக்கான நீள அகலங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். டாக்டர் விஷ்வநாதனுக்கு விற்றவரின் மூல பத்திரங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்து டாக்டர் விஷ்வநாதனுக்கு விற்பனை செய்தவருக்கு எவ்வாறு

பாத்தியப்பட்டது என்பதற்கான பட்டா, மற்றும் இதர ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

3) மேற்படி வழக்கு 2003 ல் இருந்து நடந்து வரும் நிலையில் கடந்த 20 வருடங்களாக விற்பனை செய்தவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கான மூல ஆவணங்களை தேடி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஒரு கிரய பத்திரம் அல்ல என்றால் சரியல்ல. அது கிரயப்பத்திரம் தான். நான் சொல்வது சரியல்ல என்றும் மேற்படி வா.சா.ஆ.2 ல் சொல்லி உள்ள வாசகங்களும் **நில ஒப்பந்த வர்த்தமானம்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஒரு கிரய பத்திரம் அல்ல என்றும் அது ஒப்பந்த பத்திரம் என்றும் சொன்னால் அதில் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் கிரய பத்திரம் என்று உள்ளது என்றால் சரிதான். அதில் சுத்த கிரய பத்திரம் என்று எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் உள்ள 2 வது ஐட்ட சொத்து 588 ச.அடி யில் நீள அகலங்கள் சொல்லி உள்ளார்களா என்றால் சொல்லப்படவில்லை. மேற்படி 2 வது ஐட்ட சொத்துக்களை பொறுத்து உரிமை கோருவதற்கு எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் வா.சா.ஆ.2 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் அதில் சொத்து விவரங்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5) 07.11.1949 ல் பத்திரத்தினை விற்ற சீத்தராமன் வகையறா அவர்கள் டாக்டர் விஷ்வநாதன் பெயரில் இல்லாத ஒரு சொத்தை உருவாக்கி விற்பனை ஆவணம் தயார் செய்து உள்ளார்கள் என்றால் சரியல்ல. 1949 ல்

இருந்து விஷ்வநாதன் பெயருக்கோ எனது அப்பா பெயருக்கோ நாளது வரை வருவாய் துறை ஆவணங்கள் பட்டா சிட்டா முதலிய ஆவணங்களை வழக்கில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் சொத்து வரி செலுத்திய ஆவணங்கள் மட்டும் தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சொத்து வரியில் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் ஆகியவை வராது என்று சொன்னால் சரிதான்.

6) இந்த வழக்கில் மொத்தம் 7860.16 ச.அடி என தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 செண்ட் என்பது 436 ச.அடி. 16 செண்டிற்கு 6976 ச.அடி என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் படி சொல்லும் சொத்து விஸ்தீரணம் 588 ச.அடி. வழக்கில் சொல்லப்பட்டுள்ள இரண்டு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் எங்களுக்கு புத்திரகவுண்ட பாளையத்தில் இல்லை. மேற்படி இரண்டு சொத்துக்களை சேர்த்தால் 7564 ச.அடி என்று சொன்னால் சரிதான். ஆனால் நான் வா.சா.ஆ.1, 2 ஆவணங்களின் சொத்து விஸ்தீரணங்களுக்கு அதிகமாக 7860.16 ச.அடி என்று வழக்கில் தாக்கல் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

7) 296 ச.அடி வித்தியாசமாக இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அன்றைய சமயத்தில் அளவை செய்த போது என்ன அளவு வந்ததோ அந்த அளவைதான் நான் வழக்கில் சொல்லி உள்ளேன். மேற்படி சொத்தை கிரயம் வாங்கும்போது அளந்தார்களா என்று எனக்கு நேரடியாக தெரியாது. 2 பத்திரத்திலும் நீள அகலங்கள் சொல்லப்படாத நிலையில் எதன் அடிப்படையில் வழக்கின் சொத்து விவரத்தை நீள அகலத்தை சொல்லி உள்ளோம் என்றால் அந்த சமயத்தில் அளவீடு செய்தபோது வந்த

அளவை சொல்லி உள்ளோம். அப்போது சொத்து விவரத்தில் உள்ள அளவு தான் இருந்தது. எனவே மேற்படி வா.சா.ஆ.1 மற்றும் 2 பத்திர சொத்துக்களுக்கு மீறிய அளவு சொத்து இருந்தது என்றால் சரிதான்.

8) மேற்படி சொத்துக்கள் என்னுடைய சொத்து என்று சொல்வதற்கான தற்போதைய பட்டா சிட்டா முதலிய ஆவணங்கள் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கில் சொல்லியுள்ள சொத்து விவரமே 1ம் வாதியால் ஒரு யூகத்தின் அடிப்படையில் தோராயமாக சொல்லப்பட்டது என்றால் இல்லை. எனவே தாவா வழக்கில் சொல்லி உள்ள சொத்து விவரமே தவறானது என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் நாளது வரை அமலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் போட்டுள்ள வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

9) 22.07.1980 தேதிய ஒரு உயிலை கொடுத்துள்ளேன் ( வா.சா.ஆ.3). அந்த உயில் ஒரு வெள்ளைப்பேப்பரில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அப்போது எனக்கு 3 வயது தான் என்றால் சரிதான். மேற்படி உயில் பத்திரத்தை யார் எழுதியது என்றால் பத்திர எழுத்தர் வெங்கடாஜலபதி எழுதி உள்ளார். எங்கள் குடும்பம் டாக்டர் குடும்பம். விவரம் தெரிந்தவர்கள். ஏன் இந்த உயில் பதிவு செய்யப்படவில்லை என்றால் உடல் நிலை சரியில்லாமல் போனதாலும் நெஞ்சு வலி ஏற்பட்டதாலும் வழக்கறிஞரை ஆலோசித்து உயில் எழுதலாம் என்று சொன்னதால் உயில் எழுதப்பட்டது என்று எனது சித்தி தெரிவித்தார். மேற்படி உயில் பதிவு செய்யப்படாததற்கு தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை. மேற்படி உயில் பதிவு செய்யப்படவேண்டும்

என்று தெரியும் என்றால் வழக்கு போட்ட பின்னிட்டு தான் தெரியும். மேற்படி உயில் பத்திர தாளில் எழுதப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ல் உள்ள 2வது பாராவில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். மேற்படி உயிலை வா.சா.ஆ.1 பத்திரத்தை மட்டும் தான் 1 ஐட்ட சொத்தாக காண்பித்து உயில் எழுதி உள்ளார்.

10) வா.சா.ஆ.2 ஆவணத்தின் படியான 588 ச.அடி சொத்தை பொறுத்து இந்த உயில் ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள 2வது ஐட்ட சொத்து ஆத்தூர் காதர்பேட்டையில் உள்ள சொத்து என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது எனது ஆவணங்களின் அடிப்படையிலேயே பொய்யான ஆவணம் என்றும் செல்லாத ஆவணம் என்றும் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு உரிமை இல்லாத சொத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி உயிலே சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 1980ல் உள்ள இந்த உயிலில் 16 செண்ட் தான் காண்பிக்கப்பட்டுள்ளதே தவிர அதில் சொத்தின் நீள அகல அளவுகள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணமானது பிரதிவாதிகளிடம் இருந்து வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த ஆவணமே பொய்யாக போலியாக தயாரிக்கப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்களின் மீது எவ்வித உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

11) மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் மேற்படி ஆவணங்களின் அசல் வேண்டும் என்று சொல்லி மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆவணங்கள் எதற்காக வாங்கினேன் என்றால் எனது அம்மாவிற்கு வயதாகி விட்டதாலும் என்னால் மதுரை திருமங்கலத்தில் இருந்து வந்து வழக்கு சொத்துக்களை பராமரிக்க முடியாது என்பதால் வழக்கு சொத்துக்களை விற்று விடலாம் என்ற எண்ணத்தில் மேற்படி ஆவணங்களை கோரி மனு தாக்கல் செய்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் I.A.No.66/2021ல் பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய தாயாருடையது. மேற்படி பிரமாண பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளதாக கண்டுள்ளது. மேற்படி பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் சரியானது தான்.

12) உயில் பத்திரம் எங்கள் குடும்பத்திற்குள் எழுதப்போகிறோம் என்று சொல்லி ஒப்புக்கொண்டு (Undertaking) அதன் அடிப்படையில் தான் மனு அனுமதிக்கப்பட்டு அசல் பத்திரங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் திருப்பி கேட்கவில்லை என்றால் சரிதான். 02.12.2021ல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை கடைப்பிடிக்காமல் அதற்கு மாறாக ஒரு ராஜேந்திரன் மற்றும் சித்ரா பெயருக்கு ஒரு போலியான கிரயப்பத்திரங்களை எழுதி கொடுத்துள்ளோம் என்று சொன்னால் கிரயம் செய்துள்ளோம். நான் நீதிமன்றத்தில் பொய்யான வாக்குமூலம் கொடுத்து அதன் அடிப்படையில் செயல்படாமல் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு முரணாக 21.01.2022ம் கிரயப்பத்திரங்கள் எழுதி உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பணம்

அவசியம் தேவைப்பட்டதால் கிரயம் செய்தேன். நீதிமன்ற உத்தரவுக்கு முரணாக செயல்பட்டது சட்டப்படி குற்றம் என்று சொன்னால் சரியல்ல.

13) தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாதபோதும் அவ்வாறு உரிமை இருப்பதாக சொல்லாமல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது நீதிமன்றத்தில் உரிய அனுமதி பெறாமல் மேற்படி சொத்தை சித்ரா மற்றும் ராஜேந்திரனுக்கு விற்க எனக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த சூழ்நிலையில் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்த தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி சித்ரா மற்றும் ராஜேந்திரனுக்கு சொத்துக்களை விற்றது போக மீதி சொத்து எதுவும் தாவா சொத்துக்களில் இல்லை என்று சொன்னால் நெடுஞ்சாலை துறை எடுத்துக்கொண்டது போக மீதம் உள்ள சொத்தை விற்று விட்டேன். எனவே எனக்கு தாவா சொத்துக்களில் மீதம் சொத்து எதுவும் இல்லை. எனவே வழக்கு சொத்துக்களில் எனக்கு எவ்வித சொத்தும் மீதம் இல்லை என்றால் சரிதான். எனக்கே தாவா சொத்தில் உரிமை இல்லாதபோதும் வழக்கு நிலுவையில் உள்ள போது அனுபவத்தில் இல்லாத போதும் வழக்கு சொத்தை விற்பதற்கு எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் அனுபவித்த வந்த சொத்தை தான் விற்றோம்.

14) தாவா சொத்தை விற்ற பத்திரம் அமுலுக்கு வரவில்லை என்றும் மேற்படி பத்திரம் மூலம் வாங்கிய நபர்களின் அனுபவத்திற்கு சொத்து வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவர்கள் மரக்கடை வைத்துள்ளார்கள். நான் சொல்வதுபோல் சித்ரா மற்றும் ராஜேந்திரன்

மரக்கடை வைக்கவில்லை என்றும் அந்த பிரதிவாதிகளின் சுவாதீனம் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

15) என்னிடம் காட்டப்படும் இரண்டு பத்திரங்கள் தான் சித்ரா மற்றும் ராஜேந்திரனுக்கு எங்களால் விற்கப்பட்ட பத்திரங்கள் என்றால் சரிதான். மேற்படி பத்திரங்கள் வாதி தரப்பில் ஏற்கனேவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன ஆனால் குறியீடு செய்யப்படவில்லை. எனவே மேற்படி ஆவணங்கள் பிரதிவாதி தரப்பில் **பி.வா.சா.ஆ.1 மற்றும் 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரயப்பத்திரம் இரண்டிலும் பக்கம் 4 ல் 07.11.1949 தேதிய கிரயப்பத்திரப்படியும் 22.07.1980 தேதிய உயில் படியும் பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரயம் செய்து தருவதாக தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை பொறுத்து மேற்படி கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

16) மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்து நெடுஞ்சாலை துறையால் 2006 ம் வருடத்திற்கு பின் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் அந்த பத்திர (வா.சா.ஆ.2) படியான சொத்து ஆவணத்தில் (பி.வா.சா.ஆ.1 மற்றும் 2) காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் சொத்து விவரத்தில் வடமேற்கு மூலையில் 10 லிங்ஸ் மற்றும் தென்கிழக்கு மூலையில் 10 லிங்ஸ் என்று காட்டப்பட்டுள்ளது. அதில் நான் சொல்வது போல நெடுஞ்சாலை துறையால் முழு சொத்துக்களும் ஆர்ஜீதம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பாதிக்கு பாதி சொத்து 16 செண்ட் மற்றும் 588 செண்ட்டில் வடபுறம் எடுக்கப்பட்டு விட்டது. தென்கிழக்கு மூலையில் உள்ள சொத்து எவ்வித ஆர்ஜீதமும்

செய்யப்படவில்லை. இந்த பத்திரத்திலேயே பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ல் வா.சா.ஆ.2 ல் உள்ள தென்கிழக்கு மூலையில் உள்ள சொத்தை காண்பிக்கப்படவில்லை. எனக்கு நன்றாக தெரிந்து தான் எனக்கு வா.சா.ஆ.2 சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாததால் தான் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ல் தென்கிழக்கு மூலையில் உள்ள சொத்தை காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

17) தாவா சொத்தில் ஆர்ஜீதம் செய்யும்போது கிழமேல் மற்றும் தென்வடலாக எவ்வளவு எடுக்கப்பட்டது என்றால் மொத்தம் 116 அடி இருந்தது. அதில் 62 அடி போக மீதம் எடுக்கப்பட்டு விட்டது. இவ்வழக்கில் நான் சொத்தை விற்ற நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து நடத்த கோரி மனு தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். அந்த இடை மனு எண். 356/2022 ஆகும். அந்த மனுவானது பிரதிவாதிகளின் கடும் எதிர்பபினால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த இடை மனு எண். 356/2022 உத்தரவின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சி.ஆர்.பி. 2852/2024 என்ற சீராய்வு மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

18) மேற்படி பிரதிவாதிகள் நீதிமன்றத்தை ஏமாற்றி கிரயம் செய்து விட்டார்கள் என்று வழக்கை தள்ளுபடி செய்யக்கோரி I.A.No.188/2022 என்ற மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை நாங்கள் சித்ரா மற்றும் ராஜேந்திரனுக்கு விற்ற பின்பு எங்களுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்று தாக்கல் செய்த மனுவில் விசாரணைக்கு பின்னிட்டு அதை வழக்கில்

தீர்மானிக்கலாம் என்று முடிவெடுத்து மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான்.

19) நில ஆர்ஜீதம் செய்து கிட்டதட்ட 20 வருடங்கள் ஆகிறது. நில ஆர்ஜீதம் சம்மந்தமாக எங்களுக்கு நெடுஞ்சாலை துறையில் இருந்து அறிவிப்பு எதுவும் வரவில்லை. இது வரைக்கும் நெடுஞ்சாலை துறையில் இருந்து நஷ்ட ஈடு எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்த வழக்கு முடிந்தபிறகு தான் கிடைக்கும் என்று சொன்னார்கள். நில ஆர்ஜீதம் செய்தது சம்பந்தமாக ஆட்சேபித்து அல்லது இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் ஏன் எங்களுக்கு நோட்டீஸ் அனுப்பவில்லை என்று கேட்டீர்களா என்றால் இல்லை.

20) நில ஆர்ஜீதம் செய்த சொத்தும் மீதம் உள்ள சொத்துக்களும் சித்ரா மற்றும் ராஜேந்திரனுக்கு விற்றதாக சொல்லும் சொத்துக்களின் எங்களுக்கு உரிமை இல்லை என்பதால் தான் மேற்படி எவ்வித நில ஆர்ஜீத நடவடிக்கைளில் பங்கு பெறவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை ஏமாற்றி ஆவணங்களை பெற்று சென்று அனுமதி இல்லாமல் கிரய பத்திரம் செய்துள்ளதால் அதன்படி நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க கோரி IA.No.187/2022 என்ற மனு பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது.

21) மேற்படி மனு சம்மந்தமான விவரங்கள் தீர்ப்பின் போது விவாதிக்கப்படும் என்று முடிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் அது உரிமையியல் நீதிமன்றத்திற்கு வராது என்று முடிக்கப்பட்டுவிட்டது. மேற்படி வழக்கு கடந்த 23 வருடங்களாக நடந்து வரும் நிலையில் நெடுஞ்சாலை துறை

ஒரு பகுதி சொத்தை ஆர்ஜீதம் செய்யப்பட்டுவிட்டது என்ற விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றும் அதைக்குறித்து எவ்வித திருத்தப்பாடும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்குரையிலும் சொத்து விவரத்திலும் நெடுஞ்சாலை துறை ஒரு பகுதி சொத்தை ஆர்ஜீதம் செய்து விட்டது என்ற விவரத்தை சொல்லவில்லை.

22) தாவா பிராதையும் தாவா சொத்து விவரத்தையும் மேற்சொன்னவாறு திருத்தம் செய்யாத காரணத்தினால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலை துறை ஒரு பகுதி சொத்தை ஆர்ஜீதம் செய்து விட்ட நிலையில் அந்த சொத்து என்னுடைய சொத்து என்று உரிமை கோர எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தவறான சொத்து விவரத்தின் அடிப்பபடையிலும் தவறான வழக்குரை அடிப்படையிலும் நான் வழக்கை நடத்தி வருவதால் வழக்கு செல்லத்ததக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு தற்போது வழக்கின் பொருண்மை அடிப்படையில் எந்த சொத்தும் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கை மேற்கொண்டு நடத்த எனக்கு (வாதிகளுக்கு) சட்டப்படி தார்மீக உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

23) இந்த தாவா சொத்து தான் எனது சொத்து, அதை அளக்க நில அளவையர் நியமனம் செய்து சொத்தை அடையாளம் காட்ட நான் இதுவரை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பூஸ்திதியில் உள்ள சொத்தில் விவரங்களை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எனக்கே சம்மந்தம் இல்லாத சொத்தை

இந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை 1 மற்றும் 2 ஆக தாக்கல் செய்து இந்த சொத்துதான் எனது சொத்து என்று காட்டி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 சொத்து வரி ரசீது திருமங்கலம் ரசீதும் ஆத்தூர் ரசீதும் தாக்கல் செய்து உள்ளேன் என்று சொன்னால் வா.சா.ஆ.10 திருமங்கலம் சொத்துக்குண்டான வரி ரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணமானது ஆத்தூர் ஜோதி நகர் சொத்துக்குண்டான ரசீது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ரசீகளும் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்படாதவைகள் என்றால் சரிதான்.

24) மீதமுள்ள வா.சா.ஆ.5 ல் இருந்து வா.சா.ஆ.9 வரைக்கும் உள்ள ரசீதுகள் தாவா சொத்துக்கு சம்மந்தப்படாத ரசீதுகள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்கள் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் மற்றும் பிரதிவாதிகளுக்கும் மற்றும் 3 ம் நபர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் 2 முதல் 5 பிரதிவாதிகள் நால்வரும் சேர்ந்து எங்கள் பெயரிலும் பொன்னுசாமி அருள் பெயரிலும் வழக்கு தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.99/2016 என்ற எண்ணில் வழக்கு நடந்து வருகிறது என்று சொன்னால் தெரியாது.

25) அந்த வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிகள் அவர்கள் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள் அதைப்பற்றி விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் பெயரில் 10.04.2004 ல் ஆத்தூர் நத்தம் நில வரி தாசில்தார் பட்டா கொடுத்துள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. ஆத்தூர் சிறப்பு தாசில்தார் பிரதிவாதிகளுக்கு தான் சொத்து பாத்தியம் என்று சிட்டா கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பசலி 1412

புத்திரகவுண்டபாளையம் கிராம நிர்வாக அலுவலர் சிட்டா பிரதிவாதி பெயருக்கு வழங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 10.07.2006 ம் வருடம் பிரதிவாதி பெயரில் ஆத்தூர் தாசில்தார் பட்டா கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்குண்டான வருவாய்துறை ஆவணங்கள் மேற்படி கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் ஆகியோர் ஆய்வு செய்து பிரதிவாதி பெயருக்கு வழங்கி உள்ளார்கள் மற்றும் மின் இணைப்பு பெற்றுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி மின் இணைப்பு சம்மந்தமாக என் அப்பா ஆட்சேபணை செய்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் எங்கள் செல்வாக்கை வைத்து மின் வாரிய அதிகாரிகள் மூலம் மின் இணைப்பை துண்டிக்க நடவடிக்கை எடுத்தோம் என்றும் ஆனால் அது நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் மின் இணைப்பு பெற்ற விவரத்தையோ மின் இணைப்பு சம்மந்தமாக என் அப்பா ஆட்சேபணை செய்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்ற விவரத்தையோ சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சாட்சியிடம் வழக்குரை காண்பிக்கப்பட்டு அதில் அந்த விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்று கேட்கும்போது சொல்லப்பட்டுள்ளது. (**குறிப்பு மின் இணைப்பு வாங்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது துண்டிக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை.**)

26) பிரதிவாதிகள் எங்கள் பெயரில் அசல் வழக்கு எண்.99/2016 நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் விவரம் தெரியவில்லை என்பதால் இரு வழக்கின் விவரம் சாராம்சம் தெரியாமல் இந்த வழக்கை நான் நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருப்பதால் நான் வழக்குரையில் சொல்லி உள்ளவாறு பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் அத்து மீறி நுழைவதாக சொல்லி உள்ள விவரம் முற்றிலும் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

27) வழக்கு போடுவதற்கு முன்பு 2003, 2004 ல் அத்து மீற முயற்சி செய்தார்கள். அது மார்ச் 2003 ஆகும். பின்னிட்டு சாட்சி ஞாபகம் இல்லை என்று சொல்கிறார். நான் சொல்வது போல 2003, 2004 ல் மேற்படி சொத்தில் பிரதிவாதிகள் அத்து மீற அவசியம் இல்லை என்றும் ஏனென்றால் அந்த சொத்து அவர்கள் அனுபவத்தில் இருந்து வருவதால் அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மேற்படி வழக்கு சொத்தில் வியாஜ்ஜிய மூலமே ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் வியாஜ்ஜிய மூலம் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பரம்பரையாக பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவர்களுக்கு அருகிலேயே சொத்துக்கள் உள்ளது என்றால் தாவா சொத்துக்களுக்கு இருபுறமும் பிரதிவாதிகளுக்கு தான் உள்ளது. மேற்படி தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

28) தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பரம்பரையாக பாத்தியப்பட்டது என்பதால் தற்போது உள்ள பிரதிவாதிகள் 24.09.2000 தான செட்டில்மெண்ட் பத்திரப்படி எழுதி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் 24.11.2000 தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகும். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளது.

29) 1வது பிரதிவாதிக்கு அது பாத்தியப்பட்டதால் அதை 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சக்கரவர்த்தி குடும்பத்திற்கு பரம்பாரையாக பாத்தியப்பட்டதால் தான் பின்னிட்டு சக்ரவர்த்திக்கு வந்து பின்னிட்டு சக்ரவர்த்தி தன் மகன்களான 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி உள்ளதால் மேற்படி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது சொத்து விவரத்தில் 7860 ச.அடி என்று கொடுத்துள்ளேன் ஆனால் இந்த பிரதிவாதிகள் தங்களுடைய வழக்குரையில் தாவா சொத்தின் விவரம் 7339–1/2 ச.அடி என்று தான் குறிப்பிட்டு உள்ளார்கள் என்பதால் நான் வழக்குரையில் சொல்லி உள்ள சொத்து விவரம் தவறானது என்றும் பிரதிவாதிகள் சொல்லி உள்ள சொத்து விவரம் சரியானது என்றும் சொன்னால் சரியல்ல.

30) 02.10.2012ம் தேதி பொன்னுசாமி, கோமதி, விசாலாட்சி ஆகியோர் தாவா சொத்தில் அத்து மீறி நுழைந்து பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்க முயற்சி செய்ததால் அதனால் தான் 99/2016 என்ற வழக்கு தாக்கல் செய்து இந்த நீதிமன்றத்திற்கு மாற்றி வழக்கு நடந்து வருகிறது என்றும் 99/2016 என்ற வழக்கில் உள்ள சொத்துக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துளள ஆவணங்களும் தவறானது என்றும் வழக்குரையும் தவறானது என்றும் பிரமாண வாக்குமூலமும் தவறானது என்றும் எனவே வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

31) 21.01.2022 பின்னிட்டு சித்ரா மற்றும் ராஜேந்திரனுக்கு வழக்கு சொத்தில் ஒரு பகுதியினை விற்ற பின்னிட்டு கிரய பத்திரம் மூலம் விற்பனை செய்து பிறகு நான் இந்த வழக்கை தொடர்ந்து நடத்துதவற்கு எனக்கு எவ்வித சட்டப்படியான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த வழக்கில் எனக்கு எவ்வித பரிகாரமும் கோருவதற்கும் கிடைக்கவும் அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.09.02 17:28:06 +0530

**Subordinate Judge, Attur.**